*ஹழரத் முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

பல்லவி ஆனந்தபைரவி / ஆதி

கண்டேனே மையல் கொண்டேனே - எந்தன்
கனவினில் கண்குளிரவே

அ. பல்லவி

தண்டேனொழுகிய தாமரைப்போலெழுந்து
தாதவிள் செழுமலர் பாதமெனதுமுக
மீதில் முகக்க அப்துல்காதிர் முஹியித்தீனே

சரணங்கள்

1. தந்த ரட்ன சிவிகை மீதினிலேறி
   தமியனுக்காக வெகு தயவுகள்கூறி
   சொந்த அடிமையென வந்துள்ளந்தேறி
   தொலையாத மையல்கொண்டுள்ளன்புமீறி
   தொழு பொழுதினில்வெகு தளதளவெனஒளிர்
   தொழுகியபதமெனில் அழகுதரயிரவில்,

2. பேரிட்டபிள்ளையை நான் பாதத்தில்போட
   பிரியம்வைத்தேந்திருக்கை தொட்டுவிளையாட
   ஏரிட்டசந்த்ரமையல் சிந்துகள்பாட
   இனிநாளைக்காகட்டெந் திருவுரையாட
   இருபற வருமவ ரடிமைத்தனையு மிக
   வருடைதனிலே மிக மனமுற வாழ்க,

3. ஹழ்ரத்திலே கனியாய் நபிகண்டநாதர்
   கள்ளந்தனக்குவெகு கவிநல்கும் போதர்
   கிழுறுநபி கையினால் உணவுண்ட நீதர்
   கேட்டபேர்க்கெல்லாங்கிருபை கொடுக்கும்பொற்பாதர்
   கேதமில்லாத சகோதர சீர்பகுதாதுக்
   கரசர் அப்துல்காதிர் முஹியித்தீனே.

*உதுமான் நெய்னா புலவர் (ரழி) அவர்கள்*

ஏகசரணங்கள்

பல்லவி

மனதே நான் கொண்ட காதல்
மறக்ககூடுதில்லையே - (பாவி - ஏழை)
கனகபதிவாழப்துல் காதிர்சாஹிபுவைத்தேடி
காவல்புரிந்தருள காத்தேன் மிகமிக நான்வாடி,

நேராத பள்ளிகளெல்லாம் நேர்ந்தேன்
அதிலொன்றும் காணேனே - நாகூர்
மீறான்சாஹிபல்லாது வேறொருபாதமும்பூணேனே
ஆரார்முன்னேசென்றாலும் அவர்புகழோதவுமானேனே
பேராசைகொண்டுவாழும் பேர்களில்நானொருவீணேனே

நெஞ்சே உனது தஞ்சம் நீயல்லால்
வேறொரு தூதில்லையே - தஞ்சம்
உனைநம்பினேன் தயவுவைத்தா லெனக்குத்தீங்கில்லையே
வஞ்சகம்செய்யலாமோ மனதேஎன்மேல்வாதில்லையே
கெஞ்சிகெஞ்சிநின்றாலும் கேட்கவும்வேறொருகாதில்லையே

கடலில் நடந்துவந்தப்துல் காதிர்மீறாவும்வாராரோ
திடனாம்ஹசன்குத்தூஸு செல்வரும்என்முகம்பாராரோ
மடலேந்தியபையல்முன் வந்தவர்காட்சியும்தாராரோ
உடலும்உயிரும் ஒன்றாய்உருகுது
எனைவந்து சேராரோ

*பா.சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

கனடா / ஏகம்

பல்லவி

தையலே என் மையல் மீறுதே
தாஹா நபிமீதே - எடி

அ.பல்லவி

துய்யந்திருத்தூதராய் வந்துதித்திடும்
வையம்புகழ் மெய்யரிந்தப்
பையற்கருள் செய்யநிதந் - தையலே

சரணங்கள்

காசினியி லமவாசி மதியழை
காத்திமுல் லன்பியா - எடிகாசி ...
தேசராஜர்போற்றும் ஹாஷிம்குலத்தில் வந்த
காசிம் யாசீன் தாசீனெனும்
ராஜரைக்கண் காணவிளந் - தையலே

சந்த்ரவடிவினுந் சுந்த்ர முகமேனி
சாந்தங் கமழ்பூவாம் - எடிசந்த்ர...
கந்த்ரங்குடையிடு மந்த்ரர்க்கிறையென்முன்
வந்துவந்து கந்தப்பாதஞ்
சொந்தமாய்த் தந்தாளவிளந் - தையலே

கன்னல்கமுகொடு செந்நெல் விளைமக்கா
மன்னர் அப்துல்லாஹ் - எடிகன்னல்...
அண்ணலவர்மக வின்னும்வரக்காணேன்
பெண்ணேகண்ணே மின்னேஇதற்
கென்னசெய்வே னப்துல்லாஹ்வென் -தையலே

*ஹழரத் முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

மோகனம் / ரூபகம்

பல்லவி

அடிமைக்கிரங்கி ரட்சிப்பீரே - எந்தன்
ஆண்டவரே உமறென் பீரே

அ.பல்லவி

படிமெய்கவே சிவிகைநேரே - விண்மேல்
பதமாய் நடாத்துங்குருநீரே - வந்து
பார்த்தவரடிபணிந் தேற்றவும் அகமலர்
பூத்திட அவர்மனம் தேற்றிடும் ஒலியே,

சரணங்கள்

மாதங்கமோர் துதிகையாலே - பாதை
வழிகாட்டவே நடந்ததாலே
மாதங்குறை பகர்ந்ததாலே - சற்றும்
வாய்விண்டிடாதியர் கையாலே - அச்சை
வரமிசையேறிட இருநரர்கூறிட
குருவுரைத்தேறிட வருமதிஜயரே,

பூரணமாமதியைக் கேட்க - சுண்ணாம்
புதியகரண்டகத் துண்டாக்க
காரணமீதெனவே பார்க்க - யார்க்கும்
கவலாதமையென்றுரை தாக்க - நவம்
காட்டுமதிபதியே கூட்டும்பரகதியே
நாட்டுமகமதியே தீட்டும்வெண்மதியே

கன்னல்வளர் வகுதையூரா - அப்துல்
காதிரொலியருள் குமாரா
பொன்னிலொளிரு மகாமேரா - எவர்க்கும்
புண்ணியஞ்செய்யும் கற்பகதாரா - அருள்
பொங்கு கடலறிவு தங்குமுமறொலியே
திங்களொளிர்வதன வென்கண்ணின்மணியே.

*ஹழரத் முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

கல்யாணி / ஆதி

பல்லவி

காதல்பெருகியோடுதே புகாரிகாட்சி
காண இதயம் நாடுதே

அ.பல்லவி

மாதிலிடத்துவந்த வருடைதனையடித்த
மாத்தம்வயிற்றிருந்து தோற்றும்பிள்ளைசிரசு
மையின்வடிவென செய்யும்மாதவ
ரையம்நீக்கிடும் செய்யிதானவர்
பஸ்திஜலலிம ஹஸ்திசருவரு
கஸ்திகெடிகெடி மஸ்தியொலிமிசை, - காதல்

சரணங்கள்

மாந்த்ரர்க்கறிவுரைக்கவே வெளியில்தீபம்
வைக்க மழைபெருக்கவே
காந்தத்திருவிளக்கை சார்ந்தேகியேஎடுக்கப்
போந்தோர்தமைவிலக்க நூந்திடாதேவிளக்கும்
காரணிகர்மதி பூரணவஜிகர்
தாரையணிஉமர் மார்பையணைபுயர்,- பஸ்தி... காதல்

மாசென்னிதியங்கக்கவும் வணங்கும் பள்ளி
வாசலுத்ரம் வளர்க்கவும்
சீசருக்கோரிலையை சிர்றாகஅழைக்கவும்
வீசரணாயுதத்தை மீண்டுயிரளிக்கவும்
வெற்றிபெற்றவர் முத்தி ஜூதுரியை
முத்தினொளிவென வைத்தபிரபலர்- பஸ்தி... காதல்

பூஞ்சோலைமேவும் கொச்சியில் புரந்தொபாத்தாய்ப்
போயுயிராய் மகிழ்ச்சியில்
மாஞ்சோலைகண்ணனூரில் மறைந்தோர்பாவாபகுறுத்
தீன்செல்வரிஸ்மாயீல் செய்தவத்துதித்திடும்
மதலையஹ்மது சுதனென்றெனவரு
மத்ஹூபுரியுஞ் செய்யிதுமுஹம்மது- பஸ்தி... காதல்

*பா.சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

கமாஸ் / அட

பல்லவி

கண்ணால் காணத் தேடுதடி
கருணைமிகச்செயும் ஸதக்கொலியை-தினம்...கண்ணால்

அ.பல்லவி

கண்ணே யொருமுறை யாயினுங்
கனவினோடும் வாராரோரடி ... கண்ணால்

சரணங்கள்

மழைமுகங்காணாப் பயிர்போல்வாடி
மாதாவைக்காணாச் சிசுபோல்தேடி
அழுதழுதுந்தையைக் காணாமல்
அவராலென்னாவி போகுது சகியேனடி...கண்ணால்

அருணனொளிபோல் பூவில்கதிர்வீசும்
அறிவுக்கடலிது விசுவாசம்
தரணிமீதினி லெனையீன்ற
தாதா இறையொலி நாதரடி ...கண்ணால்

அவனியில்வான்மழை பெய்யச்செய்தார்
அறிவுரைத்தேகல்லை யழச்செய்தார்
தவமிகு மாமக்கக் க.ஃபாவில்
சகியே ஒக்த்தைந்தும் தொழுதுகொண்டோரடி
...கண்ணால்

காஹிர்மாநகர் வருங்கோவாம்
கருமை நிழற்றுநபி மறைப்பூவாம்
மாஹிர்சுலைமான் பெற்றெடுத்த
மகவாம் ஸதகத்துல்லாஹ்ஒலியே ...கண்ணால்

காஹிர்மாநகர் வருங்கோவாம்
கருமை நிழற்றுநபி மறைப்பூவாம்
வாகுறுங்கீழக் கரைவதிந்தோர்
வாழ்த்தும்புகழப்துல் லாஹ்எளியேன் தினம்
...கண்ணால்

*உதுமான் நெய்னா புலவர் (ரழி) அவர்கள்*

பல்லவி

அழைத்திங்கே கூட்டிவாருங்கோ
ஜிபுரீலேமீக்காயிலே போய்...அழைத்திங்கே

அ.ப. சரணங்கள்

தழைந்தோங்கும் மக்காவாழும்
தாஹாமுஹம்மதுவை
சங்கைஸபா மருவாஹ்
சைலமும் வானோரேபோய்... அழைத்திங்கே

தையல் உம்முஹானிய்யார்
தன்வளவிற்றுயிலும்
செய்யிதஹுமதுபால்
தாமதியாது சென்று... அழைத்திங்கே

உதிக்கும் புராக்கிலேறி
உயர்வட்டக் கல்லிலேறி
மிதிக்கும்பொன் ஏணிலேறி
மேலேழு வானிலேறி... அழைத்திங்கே

தூர்ஸினாவின்பின் மூஸா
துடர்ந்தென்னை சந்தித்தார்
வருசை முஹம்மதுவை
வாகாய் கபுஷூடனே... அழைத்திங்கே

அர்ஷின் தலங்கடந்து
அடுக்காம் திரைநடந்து
முர்ஸல் முஹம்மதுவென்
முன்வந்து காண்பதற்காய்... அழைத்திங்கே

படிஎங்கும் தீன்விளங்கும்
பர்ழாம் நமாஜூநோன்பும்
அடவின் படியுதவும்
ஆசை கொண்டேனதனால்... அழைத்திங்கே

*உதுமான் நெய்னா புலவர் (ரழி) அவர்கள்*

பல்லவி

ஸல்லூஅலைஹிவ சல்லிமூதஸ்லீமா
அங்கதீ ரங்கதீ ரா... ஸல்லூ

அ.ப. சரணங்கள்

1. அல்லாஹ்வுரைத்தனன் இன்னல்லாஹஎந்தன்மலக்
கெல்லோரும் சொல்லும்நபி யுல்லாஹ்மீதே
ரசூலுல்லாஹ்மீதே ஹபீபுல்லாஹ்மீதே... ஸல்லூ

2. வாத்துமென்னும்பிஸ்மில் லாத்துமென்னும்ஸலவாத்
தேத்தங்கபூல் செய்வேனென பாத்திபன்சொன்னான்
... ஸல்லூ

3. நாத்திசைபுகழும்நபி ஏத்தமாம்ஸலவாத்தை
தோத்திரம் செய்தோர்க்குதவும் காத்திமுல்லன்பியாமேல்
... ஸல்லூ

4. கங்குலமாவாசையில் எங்கள்நபிநயினார்
திங்களழைத்தனுகூல சங்கைமஹ்மூதர்மேல்,
... ஸல்லூ

5. அல்லாஹ்வுஹந்தஹபீ புல்லாஹ்அப்துல்லாஹ்பெறும்
சல்லாபரெங்கள்நபி யுல்லாஹ்மீதே.
ரசூலுல்லாஹ்மீதே ஹபீபுல்லாஹ்மீதே... ஸல்லூ

*பா. சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

மோகனம் / ஆதி

பல்லவி

புதுமலர்ச்சரணமெப் போதியான்தரிசனம்
புவிதனிற் காண்பேனையா - வல்ல
புதியோனருள் மறைபொழியும் பூபதியெனும்
புண்யதைக்கா ஒலியே... புதுமலர்

அ.ந.சரணங்கள்

1. நித்தங்கரைந்துருகுஞ் சித்தனானுமைத்தரி
சித்திட வருள்கோனே - என
தத்தனீர் சற்றிரங்கி சித்திதரவணங்கி
மெத்தக் கெஞ்சுறேன் நானே... புதுமலர்

2. உம்மையல்லாமலெனக் கன்னைதந்தையில்லையென்
றுமக்கது தெரியாதா - தமக்
குற்றபிள்ளையென நீ ரித்தருணம் தயவ
ளித்திடாதினும் வாதா... புதுமலர்

3. அதிசவுந்திரமயி லாடக் குயில்கிளிபு
றாவன மிசைபாடும் - அந்தப்
பதிகாஹிருமரொலி பாலரப்துல்காதிரே
கதியப்துல்லாஹ் பெறனும் ... புதுமலர்

*பா.சு. முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

தேசிகம் / ஏக

பல்லவி

1. போகலாம் வாராய்சகியே பூங்காஹிரூர்தன்னை நாடி
   சாகரமெஞ்ஞானத்தைக்கா ஸாஹிபு ரவ்ழாவைத்தேடி... போகலாம்

2. வேதகுறான்ஸலவாத் தோதும்ஹிஜுபோசைகளும்
   காதலுடன்கேட்கவெந்தன் கல்புமையலாகுதடி... போகலாம்

3. திங்கள்வெள்ளிறாத்திபுடஞ் சிறப்போடுமவ்லிதெனும்
   சங்கைமதுஹோதுந்தைக்கா ஸாஹிபு ரவ்ழாவைத்தேடி..போகலாம்

4. கற்றோருமற்றவருங் காவலருங்கருதிவரும்
   எத்திசையோர்போற்றுமெங்கள் ஏந்தல்ரவ்ழாவைத்தேடி...போகலாம்

5. ஜாதிக்குலப்பெண்களுஞ் சங்கையுள் ளோரெவரும்
   சாதகமாய்வந்திறைஞ்சும் ஸாஹிபுரவ்ழாவைத்தேடி... போகலாம்

6. சொற்கத்தரம்பையர்கள் சூழவிண்ணவர் கஹ்வா
   நற்கரத்திலேந்தியூட்டும் நாயகர்ரவ்ழாவைத்தேடி... போகலாம்

7. மல்லிகைமுல்லைரோஜா மருக்கொழுந்துசந்தனமும்
   அல்பகலும்பரிமளிக்கும் ஆண்டகைரவ்ழாவைத்தேடி... போகலாம்

8. சுத்தபசுந்தங்கமும் சொல்லொணாவிநோதங்களும்
   வைத்தமைத்திலங்குகின்ற வாகையர்ரவ்ழாவைத்தேடி..போகலாம்

9. முத்துப்பவளம் பச்சையோ டுற்றநவரத்தினமும்
   சுற்றிவைத்திழைத்தசுப சோபனரவ்ழாவைத்தேடி... போகலாம்

10. மாடப்புறாவினங்கள் வாழ்த்தும்பல வண்டினங்கள்
    கூடிக்குதித்தாடுகின்ற கோமான்ரவ்ழாவைத்தேடி... போகலாம்

11. வண்ணமயில்களாட மாங்குயில் சங்கீதம்பாட
    பண்ணுமப்துல்லாஹ்பதமும் பாடும்ரவ்ழாவைத்தேடி... போகலாம்

## மெஞ்ஞானகண்ணிகள்

1. ஆதிமுதலொருவன் அஹ்மதெனுங்கோலம்
   மாதிரியாகவரும் முஹம்மதெனுமுடலில்
   நீதமுடனிறுத்தி நித்தம் ஷுஹுதுசெய்ய
   ஆதிதரும் உமறே அல்ஹம்துலில்லாஹி,

2. என்னையொருநுக்கத்தி லெழுநான்கெழுத்துகொண்டு
   தன்னையொருபடுத்தி தன்கோலம்என்னிலாக்கி
   பின்னையெழுசிபத்தும் பிலப்படஆக்கிவித்த
   அன்னைபிதாஉமறே அல்ஹம்துலில்லாஹி

3. பார்க்கப்பலவிதமாய் பலகோலம்கொண்டதெலாம்
   தீர்க்கமுடனெனக்குள் திருத்தும்பெரும்பொருளில்
   மூர்க்கமாய்நின்றகுரு முஹம்மதொளிவெனவே
   ஆக்கித்தரும்உமறே அல்ஹம்துலில்லாஹி

4. ஆறுடனாலிரண்டும் அழிந்துவீண்போகாமல்
   தேறிவருமெழுத்தில் தெளிந்தமுகங்காட்டி
   ஊறிவருஞ்சுணைமே லுயர்ந்தவெளிகாண
   ஆறுசிபத்தருளே அல்ஹம்துலில்லாஹி

5. பிண்ணியதத்துவங்கள் பிசகறதோடிவந்து
   உன்னில்எழும்பிநின்ற ஓங்காரகம்பத்துக்குள்
   கன்னிஒருத்திவந்து கால்தலைகையிலாக்கும்
   அன்னையருள்உமறே அல்ஹம்துலில்லாஹி

6. எல்லைவாசல்திறந்து என்னுள்ளிலோடிவரும்
   சொல்லப்படாதமுத்து சொர்ணம்பவளம்பச்சே
   வல்லமையானபொருள் வந்துவெளிப்படவே
   அல்லலகற்றும்உமறே அல்ஹம்துலில்லாஹி

7. காலமுழுதுமென்னை கட்டிநின்றாடும்பொருள்
   மாலானரூஹதுக்குள் மஹ்பூபைக் காட்டும்பொருள்
   மேலானஞானப்பொருள் மேவிஅருள்புரிய
   ஆலங்கடத்தும்உமறே அல்ஹம்துலில்லாஹி

8. மோகந்தருஞ்சுடரில் முளங்குமருள்காண
   வாகனமானசரம் வாழும்எழுத்துக்குள்
   தாகந்தணிந்துவர தானோனருள்புரிய
   ஆகந்தரும்உமறே அல்ஹம்துலில்லாஹி

9. அஞ்ஞானகாயமதை அடக்கிஅரசாள
கெஞ்சிஎழும்பிவந்து கொண்டாடிதன்னுள்ளாக்கி
துஞ்சாமலோடுமூச்சில் துலங்குமருள்புரிய
அஞ்சுமருக்கும்உமறே அல்ஹம்துலில்லாஹி

10. ஓடும்சுழியதுக்குள் ஒடுங்கிநின்றாடிகொள்ள
தேடிவரும்சிபத்தில் தெளிந்துமுகங்காட்டி
வாடாமல்காட்சிதர வந்தவொளிவெனக்குள்
ஆடும்அருள்உமறே அல்ஹம்துலில்லாஹி,

11. தெளிவானஈறாரில் சிறந்தோடுமுச்சுடரை
தழுவியருள்புரியும் தன்னுக்குள் தானானோர்
இளமாமற்பிலப்படுத்தும் இருநூற்றிபதிநாளில்
அழகாக்கிவிக்கும்உமறே அல்ஹம்துலில்லாஹி

12. ஈயில்லாத்தேனையுண்டு இருந்தாடும் ஜனானோர்
மீமில்லாதஹ்மதுக்குள் வெளியாகும்ரப்பானோர்
சீனில்லாஇன்ஸானில் தெளிவாகும்சிர்ரானோர்
ஜனில்லாஅரபெனக்கு அல்ஹம்துலில்லாஹி

13. ஏழுடனீராறுளங்கும் நிறைந்தபொருள்
ஏழுடனேழாக இருந்தாடும்சூட்சமதை
பாழில்அழியாமல் பத்தொன்பதிலாக்கி
ஆளும்அருள்உமறே அல்ஹம்துலில்லாஹி.

*முஹ்யித்தீன் லெப்பை ஆலிம் (ரழி) அவர்கள்*

காரணமாலை

கண்ணிகள்

1. காரணமாய்வந்தபீரே ஷெய்கொலி
   ஹாஜிஉமரெங்கள் ஸாஹிபுநீரே... காரணமாய்

2. தாரணிபுகழும் புகாரி ஒலியுல்லாஹ்
   தன்னுரைத்தணைத்திடும் நன்னவதோரே
   ஆரணம்நாவில்மாறாமல் ஓதும்
   ஆரிபே அடியனுக்கருள்புரிவீரே... காரணமாய்

3. புலிஅரி மிகுந்தகானகத்தில் பகல்
   பொழுதடைந்ததை தன்னைத்தொழுதிடுமுகத்தில்
   மலிவாக அரியுடன் அரசும்பதம்
   வருடிப்போந்திட செய்தகுருபீடம்நீரே... காரணமாய்

4. சிவிகைமேல் உமைச்சுமந்திடவே காபிர்
   திரண்டடுத்திட சீடர்விரண்டோட விண்மேல்
   செவிதாக நிறுத்தியே நடத்தச்செய்த
   தேவரீரே எந்தன் பாவந்தீர்ப்பீரே... காரணமாய்

5. இரவினில் தணித்தேகும் கானில் தேவு
   இடியென முழங்கண்டிடவே அடுத்தே
   வருவதைக்குறித்தெதிர்நோக்க அஞ்சி
   வாய்விட்டுளன்றோடிப் போய்விட்டதாமே... காரணமாய்

6. பரந்தபேராற்றில்நடக்க தண்ணீர்
   பரண்டமட்டளவான தறிந்தோரே யன்
   திறந்தொரு சுரந்தன்னைக்கேட்க தாம்பூல்
   எச்சிஈந்திட சுதன்பெறச்செய்த மேரே... காரணமாய்

7. தக்காரம் ஈரூரிலொருநாள் இரு
   தலைவர்களழைத்திட நலதெனஉரைத்ததை
   அக்கணம் ஒருநோமிரு வீட்டுண்ணும்
   அருந்திடும் ஒலியென இருந்தவர்நீரே... காரணமாய்

8. உயிரிழந்திறந்திடும்பூனை ஐத்பு
   ஒக்தினிலும் அதுடலதின் மீதிலுறவே
   தைரியத்துடனெழுந்தோடச் செய்த
   தையாளர் பையலை வுய்யக்கொள்வீரே... காரணமாய்

9. செய்யிதபூபக்கர் பம்மோ டெதிர்
செய்தேமுனிந்திட ஏதுமன்னேரம்
கையைநிறுத்திஎவர்க்கும் நவம்
காட்டி தலாக்கினைக் கேட்டுவிட்டோரே... காரணமாய்

10. அனைவரும் மழைதேடிவரவே உங்கள்
அருமைமைத்துனர்தம்மை உரிமையோடழைத்தே
மனையில் செங்கல்லை எடுத்தடுக்கச்சொல்லி
வைக்கவே திக்கெங்கும் மழைபெய்வித்தோரே... காரணமாய்

11. மகவெல்லாம் உயிர்போகமயங்க உங்கள்
மைத்துனராள் இனிபெற்றிடும் மகள்என்
மகவுக்கென உரைவழங்கி அந்த
வகைப்படி கலியாணம் நடத்திவைத்தோரே... காரணமாய்

12. நாகூரில் உமதுஹூால்அறிய ஒருநரர்
வெள்ளியிரவினில் நடுச்சாமம்வரவே
தேகம் துண்டாய்க் கிடந்திடக் கண்டகம்
திறக்க நஸீஹத்து பெறக்கொடுத்தோரே... காரணமாய்

13. பூரணமதிதரசுண்ணான் வெள்ளி
புதியகரண்டகமதில் அழைத்தோரே
வாரனம்வழிகாட்டப் பாதைபோந்த
வள்ளலே பிள்ளைமேலுள்ளம் வைப்பீரே... காரணமாய்

14. ஸாலிஹூ மலைக்கேறும் கானில் மாதர்
தடுக்க அண்டுரையாமல் நடக்க அங்கிருபேர்
உமரேஇங்குமக்கு புகாரிஉத்தரவில்லை
தரிக்கவென் றுரைக்க மீண்டோரே... காரணமாய்

15. அழியாத நாதன் லிகாவுக்கும்மை
அருமையோடழைக்குமுன் ஒருமூன்றுநாளா
மொழிஎல்லாம்அரபால் முரீதோர்நாட்டம்
மொழியவேயவர்மனம் தெளியச்செய்தோரே... காரணமாய்

16. ஆவென்ற சொல்லாலமைத்தே ஆழும்
அல்லாஹ் ஜனாபினில் செல்லும்மந்நேரம்
ஹூவென்ற சொல்லுடன் தக்பீர்கட்டி
கூடும் ஹழரத்தில் நாடிச்சென்றோரே... காரணமாய்

17. துல்க.்.தா பதிநாலில் இஷா
நேரம்தெளிவான வெள்ளிஹிஜ்ரத்
துல்குமோராயிரத்திருநூற்ரெட்டில்
சேர்ந்தே லிகாவிடம் சார்ந்திருந்தோரே... காரணமாய்

18. எண்ணிலடங்காப் புதமை ஹால்
ஹயாத்தில்நடாத்தி வ.்.பாத்தின் பின்அதுபோல்
கண்ணிலடங்காத கஷ்புகறாமத்து
காட்டியகீன் எல்கை நாட்டியபீரே... காரணமாய்

19. பூமணம் மேவும்தைக்காவில் வேத
புருகானைக் கரந்தோனை ஊக்கிடகனவில்
தாமதியாதுடன் வரவே செய்த
தாதாவே தமியனுக்காதாரம் நீரே... காரணமாய்

20. வெள்ளிஇராத்திபோதும் அந்த
வேளையில் பைத்தொன்று மறக்கவும் பீர்பேர்
உள்ளபிழையைத் தர்காவுள்ளிருந்தொரு
சப்தம் விழித்தழைத் துரைத்தவர் நீரே... காரணமாய்

21. காபிர்வதைத்த கறுப்புக்குயிர்
காட்டெனபுத்திடம் கேட்டும்வராமல்
தாபத்துட னும்மைக்கேட்க சீவன்
தானெடுத்தோட ஈமான்கொடுத்தோரே... காரணமாய்

22. மரக்கல மிழந்துங்கள் இளையமகன்
மயங்கிகங்கையில் விழுந்தேகிடும்பொழுதில்
உருக்கமாய் சடுதியிலெடுத்தே ஓடும்
உருவினிலேத்திய குருவானோர் நீரே... காரணமாய்

23. கரிபெருத்திடும் கானிலொருநாள் மதகள்
இருமதிளைய சேயனைக்காடுந்தடுத்தே
வரஉமதடிபரவுடன் வந்ததைவருத்தம்
செய்தெடுத்தோடத் துரத்திவிட்டோரே... காரணமாய்

24. இருநூறும் எழுபதுமிடையில் நாற்பதி
லங்கும் திருநாமந்துலங்க வந்தோரே
ஒருநூறில் அறுபத்துமூன்றின் இஸ்ம்
உடையோனையாள்வது கடனுமக்காமே... காரணமாய்

25. மஹ்மூதுசுதன் அப்துல்காதிர் மக
வாக எந்தந்தையாக வந்தோரே
முஹ்யீத்தீன் எனும்நாமமுடைய நிர்
மூடனை நாளைமன்றாடிக் கொள்வீரே... காரணமாய்

26. ஆதிதிருப்புகழ் கொண்டும் எங்கள்
ஆலநபிமேல் ஸலவாத்துகொண்டும்
ஓதிஇம்மாலை முகித்தேன் ஹூப்பாய்
உரைப்பவர் இறையவன் உவப்புறுவோரே... காரணமாய்

27. ஓதுவர்கேட்பவர் வாழி இதையுரைத்தவன்
சகோதரர் உக்த்துடன்வாழி
மாதாபிதா வாழிவாழி இரு.
மரபுகள் சம்மத்து பெருகிட வாழி... காரணமாய்

28. ஆமீன் அல்லாஹும்ம ஆமீன் எனக்
கருள்செய்வாய் யாரப்பல்ஆலமீன் ஆமீன்
மு.ஃ.மின்நபிபொருட்டாலே சொர்க்கம்
உந்தஉதவிசெய் எந்தன் இலாஹி... காரணமாய்

*அப்துல்மஜீத் அரூஸ் மௌலானா (ரழி) அவர்கள் இயற்றியது*

**மௌலாய ஸல்லி வசல்லிம் தாயிமன் அபதா**
**அலா ஹபீபிக கைரில் கல்கிகுல்லிஹி**

1. ரஹ்மான் கிருபையாலும் நாதாக்களின் பொருட்டும்
   முஹ்யித்தீன் ஆண்டகை மேல் முஹ்யித்தீன் மாலை சொல்வேன்
   (மௌலாய ஸல்லி . . .)
2. அகமகிழ்ந்தென் பேராவலாய் அன்பாய் என் நாயகர்க்கென்
   அகம்பொருள் உடல் ஆவியும் அகமகிழ்ந்து அர்பணிப்பேன்
   (மௌலாய ஸல்லி . . .)
3. மஹ்பூபுஸ் ஸுப்ஹானீ ம.ஃ.ஷுகுர் ரஹ்மானீ
   முஹ்யித்தீன் ஜீலானீ முன்நிறுத்தி கண்ணில் வைப்பேன்.
   (மௌலாய ஸல்லி . . .)
4. அக்தாபுகட் கரசர் அவ்தாத்களின் சிரேஷ்டர்
   பக்தாத் மறைந்த நாதர் பாதரட்ஷைகள் சுமப்பேன்
   (மௌலாய ஸல்லி . . .)
5. காதிரிய்யா சற்குருவாய் கதமென் புயமேல் வைத்தே
   காத்தருளும் ஆண்டகை இரு கால்களையும் சிரமேல் வைப்பேன்
   (மௌலாய ஸல்லி . . .)
6. யாகௌதுல் அ.ஃ.ழமென்றும் என் கலீ.ஃ.பாவாகுமென்றும்
   இறையோன் அழைத்த மகான் இரட்சகரில் நான் மறைவேன்.
   (மௌலாய ஸல்லி . . .)
7. கைதந்து ரெட்சித்தெம்மை காக்கும் குத்புல் அக்தாப்
   முஹ்யித்தீன் ஆண்டகை பாதம் உகந்தென் கண்ணில் வைப்பேன்
   (மௌலாய ஸல்லி . . .)
8. உலகில் எக்காலத்திலும் ஒருவரும் இல்லை இவர்போல்
   கௌதும் குத்புஜ் ஜமானும் ஓங்கும் புகழ் நாயகமே.
   (மௌலாய ஸல்லி . . .)

அல்ஹம்துலில்லாஹி ஹம்தன் தாயிமன் அபதா
வல்ஹம்துலில்லாஹி தும்மல்ஹம்துலில்லாஹி
அல்ஹம்துலில்லாஹி ரப்பில்ஆலமீனஅலா
மாகானயுல்ஹிமுனீ அல்ஹம்துலில்லாஹி

**மௌலாய ஸல்லி வசல்லிம் தாயிமன் அபதா**
**அலா ஹபீபிக கைரில் கல்கிகுல்லிஹி**